## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 9-7 - எங்கானல்
### (பராங்குச நாயகி 'என் காதலுக்குக் காரணம் திருமாலின் வடிவழகே' என்று எம்பெருமானது வடிவழகே பற்றாசாகத் திருமூழிக்களத்தே பறவைகளைத் தூது விடுதல்)

3623 * எங்கானல் அகங்கழிவாய் * இரைத்தேர்ந்து இங்கு இனிதமரும் *
செங்கால மடநாராய்! * திருமூழிக்களத்துறையும் **
கொங்கார் பூந்துழாய் முடி * எங்குடக்கூத்தர்க்கு என் தூதாய் *
நுங்கால்கள் என் தலை மேல் * கெழுமீரோ நுமரோடே 1

3624 நுமரோடும் பிரியாதே * நீரும் நும் சேவலுமாய் *
அமர்காதல் குருகினங்காள்! * அணிமூழிக்களத்துறையும் **
எமராலும் பழிப்புண்டு * இங்கென்? தம்மால் இழிப்புண்டு *
தமரோடு அங்குறைவார்க்குத் * தக்கிலமே? கேளீரே 2

3625 தக்கிலமே? கேளீர்கள் * தடம்புனல்வாய் இரைதேரும் *
கொக்கினங்காள்! குருகினங்காள்! * குளிர் மூழிக்களத்துறையும் **
செக்கமலத்தலர் போலும் * கண் கை கால் செங்கனி வாய் *
அக்கமலத்திலை போலும் * திருமேனி அடிகளுக்கே 3

3626 திருமேனி அடிகளுக்குத் * தீவினையேன் விடு தூதாய் *
திருமூழிக்களம் என்னும் * செழுநகர்வாய் அணிமுகில்காள்! **
திருமேனி அவட்கருளீர் * என்றக்கால் உம்மைத் தன் *
திருமேனி ஒளி அகற்றித் * தெளிவிசும்பு கடியுமே? 4

3627 தெளிவிசும்பு கடிதோடித் * தீவளைத்து மின்னிலகும் *
ஒளிமுகில்காள்! * திருமூழிக்களத்துறையும் ஒண்சுடர்க்கு **
தெளிவிசும்பு திருநாடாத் * தீவினையேன் மனத்துறையும் *
துளிவார்கட்குழலார்க்கு * என் தூதுரைத்தல் செப்புமினே 5

3628 தூதுரைத்தல் செப்புமின்கள் * தூமொழியாய் வண்டினங்காள்! *
போதிரைத்து மதுநுகரும் * பொழில் மூழிக்களத்துறையும் **
மாதரைத் தம் மார்வகத்தே * வைத்தார்க்கு என்வாய் மாற்றம் *
தூதுரைத்தல் செப்புதிரேல் * சுடர் வளையும் கலையுமே 6

3629 சுடர் வளையும் கலையும் கொண்டு * அருவினையேன் தோள் துறந்த *
படர்புகழான் * திருமூழிக்களத்துறையும் பங்கயக்கண் **
சுடர் பவள வாயனைக் கண்டு * ஒரு நாள் ஓர் தூய் மாற்றம் *
படர் பொழில்வாய்க் குருகினங்காள்! * எனக்கொன்று பணியீரே 7

3630 எனக்கொன்று பணியீர்கள் * இரும்பொழில்வாய் இரை தேர்ந்து *

மனக்கின்பம் படமேவும் * வண்டினங்காள்! தும்பிகாள்! **
கனக்கொள் திண்மதிள் புடை சூழ் * திருமூழிக்களத்துறையும் *
புனக்கொள் காயாமேனிப் * பூந்துழாய் முடியார்க்கே 8

3631 பூந்துழாய் முடியார்க்குப் * பொன்னாழிக் கையாருக்கு *
ஏந்துநீர் இளங்குருகே! * திருமூழிக்களத்தாருக்கு **
ஏந்து பூண்முலை பயந்து * என்னிணை மலர்க்கண் நீர் ததும்ப *
தாம் தம்மைக் கொண்டகல்தல் * தகவன்று என்றுரையீரே 9

3632 தகவன்று என்று உரையீர்கள் * தடம்புனல்வாய் இரை தேர்ந்து *
மிக இன்பம் படமேவும் * மென்னடைய அன்னங்காள்! **
மிகமேனி மெலிவெய்தி * மேகலையும் ஈடழிந்து * என்
அகமேனி ஒழியாமே * திருமூழிக்களத்தார்க்கே 10

3633 * ஒழிவின்றித் திருமூழிக்களத்துறையும் * ஒண்சுடரை *
ஒழிவில்லா அணிமழலைக் * கிளிமொழியாள் அலற்றிய சொல் **
வழுவில்லா வண்குருகூர்ச் * சடகோபன் வாய்ந்துரைத்த *
அழிவில்லா ஆயிரத்து இப்பத்தும் * நோய் அறுக்குமே 11

**அடிவரவு:** எங்கானல் நுமர் தக்கிலம் திருமேனி தெளி தூது
சுடர் எனக்கு பூந்துழாய் தகவு ஒழிவு அறுக்கும்